# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 32 /2022** **நாள்: 08.02.2022**

### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 57,778 வேட்பாளர்கள் இறுதியாக போட்டியிடுகின்றனர்

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்தம் 12,838 வார்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அட்டவணையினை 26.01.2022 அன்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.

மாநகராட்சி வார்டு உறுப்பினர், நகராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு 28.01.2022 முதல் இறுதி நாளான 04.02.2022 வரை மொத்தம் 74,416 வேட்பு மனுக்கள் பெறப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் விதிமுறையை பின்பற்றாமல் இருந்ததால், தூத்துக்குடி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் பார்வையாளர் ஆகியோரின் அறிக்கையின்படி, தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சியில் 33 வேட்பு மனுக்கள் பெறப்பட்ட நிலையில், அனைத்து 12 வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கான

தேர்தல் இரத்து செய்யப்பட்டது. மொத்தமுள்ள 648 நகர்ப்புற உள்ளாட்சியில் மொத்தம் 2,062 வேட்பு மனுக்கள் உரிய பரிசீலனைக்குப் பின் நிராகரிக்கப்பட்டன. 14,324 வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை திரும்ப பெற்றுக் கொண்டனர். 218 பதவியிடங்களுக்கு 218 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சிவகங்கை மாவட்டம் கானாடுகாத்தான் பேரூராட்சி வார்டு 8-ல் பதவியிடத்திற்கு வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இறுதியாக மொத்தம் 12,607 பதவியிடங்களுக்கு மொத்தம் 57,778 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

<u>பதவி வாரியான விவரம்</u>

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பு பதவிகள் | மொத்தம் பதவியிடங்கள் | மொத்தம் பெறப்பட்ட வேட்பு மனுக்கள் | நிராகரிக்கப் பட்ட வேட்பு மனுக்கள் | திரும்பப் பெறப்பட்ட வேட்பு மனுக்கள் | போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் | வேட்பு மனு எதுவும் தாக்கல் செய்யப்படாத பதவியிடங்கள் | இறுதியாக தேர்தல் நடைபெறவுள்ள பதவியிடங்கள் | இறுதியாக போட்டியிடும் வேட்பாளர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | மாநகராட்சி வார்டு உறுப்பினர் | 1374 | 14701 | 722 | 2779 | 4 | 0 | 1370 | 11196 |
| 2. | நகராட்சி வார்டு உறுப்பினர் | 3843 | 23354 | 691 | 4723 | 18 | 0 | 3825 | 17922 |
| 3. | பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 7609 | 36328 | 649 | 6822 | 196 | 1 | 7412 | 28660 |
| | **மொத்தம்** | 12826 | 74383 | 2062 | 14324 | 218 | 1 | 12607 | 57778 |

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

8/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்